செ.வெ.எண்: 40/2021 நாள்:.23.07.2021

# <u>செய்தி வெளியீடு</u>

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் பிறந்த 6 வாரம் ஆன குழந்தைகளுக்கு நியூமோகோக்கல் கான்ஜீகேட் தடுப்பூசி (P.C.V) வழங்குவதற்கான திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், அருள்புரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இஆப, அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் பிறந்த 6 வாரம் ஆன குழந்தைகளுக்கு நியூமோகோக்கல் கான்ஜீகேட் தடுப்பூசி (P.C.V) வழங்குவதற்கான திட்டத்தினை இன்று (23.07.2021) துவக்கி வைத்தார்கள்.

***<u>மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது:</u>***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க, மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறையின் மூலம் பிறந்த 6 வாரம் ஆன குழந்தைகளுக்கு நியூமோகோக்கல் கான்ஜீகேட் தடுப்பூசி (P.C.V) வழங்குவதற்கான திட்டம் இன்று (23.07.2021) முதல் மாவட்ட அளவில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. P.C.V தடுப்பூசி போடுவதன் மூலம் குழந்தைகளுக்கு தனது 6 வார வயதிலிருந்து நிமோனியா, மூளைக்காய்ச்சல் மற்றும் பாக்டீரேமியா போன்ற கடுமையான நோய்களிலிருந்து பாதுகாக்கிறது. அதனடிப்படையில், திருப்பூர் மாவட்டத்தில் 29,037 குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் நிமோனியா நோயினால் ஏற்படும் குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைக்க முடியும். இந்த தடுப்பூசி பிறந்து 6 வாரம் ஆன குழந்தைகளுக்கு அனைத்து துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் திருப்பூர்

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் தமிழக அரசின் மூலம் இலவசமாக வழங்கப்படவுள்ளது. இதற்கு தேவையான மருந்துகள் போதிய அளவில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே, பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசியை செலுத்தி ஒரு ஆரோக்கியமான சமூதாயத்தை உருவாக்குவதற்கு தமிழக அரசு எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தங்களுடைய முழு ஒத்துழைப்பினை தர வேண்டுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்), மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**